# முதல் பருவ மதிப்பீடு 2025 - 26

## மாதிரி வினாத்தாள்

## Model Question Paper

## தமிழ் முதல் தாள் (AT)

**வகுப்பு : 8** **நேரம் : $1^1/_2$ மணி**

**மதிப்பெண் : 40**

**குறிப்புகள்:**

- முதல் 15 நிமிடம் சிந்தனை நேரமாகும். வினாக்களை வாசித்து, விடைகளை வரிசைப்படுத்த இந்த நேரத்தைப் பயன்படுத்தவும்.
- வினாக்களையும் குறிப்புகளையும் கவனமாக வாசித்து விடையளிக்கவும்.
- (i), (ii) எனக் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களுள் ஏதேனும் ஒன்றிற்கு மட்டும் விடையளிக்கவும்.
- விடையளிக்கும்போது மதிப்பெண்ணையும் நேரத்தையும் கவனத்தில் கொள்ளவும்.

---

**I. 1, 2 ஆகிய வினாக்களுக்கு ஒரு மதிப்பெண் வீதம். (2 x 1 = 2)**

**சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுங்கள்.**

1. 'இலக்கியச் சுவடுகள்' என்ற கட்டுரை நூலிற்குச் 'சாகித்திய அகாதமி' விருது பெற்ற எழுத்தாளர்.

   அ) ரா.பி. சேதுபிள்ளை ஆ) ஆ. மாதவன்

   இ) இன்குலாப் ஈ) வெ. இறையன்பு

2. கல்லணையைக் கட்டிய மன்னன்.

   அ) சேரன் செங்குட்டுவன் ஆ) கரிகால் வளவன்

   இ) பாண்டியன் நெடுஞ்செழியன் ஈ) பாரி

**II. 3 முதல் 5 வரையுள்ள வினாக்களுக்கு இரண்டு மதிப்பெண்கள் வீதம். (3 x 2 = 6)**

3. கீழ்க் காணும் பாடல் வரிகளில் காணப்படும் மரங்களின் பெயர்களை எடுத்து எழுதுங்கள்.

   பார்தழுவ இழிந்துவந்து பயன்வி ளைக்கப்
   படர்குறிஞ்சி சந்தனத்தோ டகிலும் தேக்கும்
   சீர்தழுவிச் செடிகொடிகள் தழுவிச் சேர்த்த
   செல்வமெலாம் மக்களுக்காய்ச் சேர்க்க வென்றே,

4. பின் வருவனவற்றுள் ஒற்றுமை தொடர்பான பழமொழிகளை எடுத்து எழுதுங்கள்.

   அ) ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

   ஆ) ஆடிப்பட்டம் தேடி விதை.

   இ) ஒற்றுமையே பலம்.

   ஈ) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.

5. இராமாயணத்துடன் தொடர்புடைய சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள்.

   அ) தமிழில் இராமாயணத்தைக் கம்பர் எழுதினார்.

   ஆ) இராமாயணத்தின் காப்பியத் தலைவன் குகன்.

   இ) இராமாயணத்தில் சகோதரத்துவச் சிந்தனை இடம்பெறுகிறது.

   ஈ) இராமன் வனவாசம் செல்லவில்லை.

© State Assessment Cell SCERT, Kerala

**III. 6 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு மூன்று மதிப்பெண்கள் வீதம். (5 x 3 = 15)**

6. அற்ற குளத்தில் அறுநீர்ப்பறவைபோல்
உற்றுழித்தீர்வார் உறவு அல்லர் – அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி உறவார் உறவு

இப்பாடல் வரியில் இடம் பெறும் உவமையை விளக்கி எழுதுங்கள்.

7. 'வெற்றிலை நட்டான்' என்பது ஆகுபெயர். அதன் காரணத்தை விளக்கி எழுதுங்கள்.

8. (i) பின்வரும் பாடல் வரிகளைப் படித்து விமர்சனக்குறிப்பு எழுதுங்கள்.

'காய்ந்த மனம் கொண்டோரே, சமுதாயத்தில்
கண்டபடி வேற்றுமையை விளைவிக் கின்றார்.
சாந்தகுணம், பெருந்தன்மை குறையும் நாட்டில்
சமுதாய ஒற்றுமையும் குறைந்து போகும்' – சுரதா

(அல்லது)

(ii) சமூகத்தில் சமத்துவம் வளர மேற்கொள்ளவேண்டிய வழிமுறைகளைப் பட்டியலிடுங்கள்.

9. (i) பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்.

இக்குறள் கூறும் கருத்தினை விளக்கி எழுதுங்கள்.

(அல்லது)

(ii) உங்கள் பள்ளி இலக்கிய மன்றம் சார்பாகப் பிப்ரவரி 4 ஆம் தேதி காலை பத்து மணிக்குச் 'சகோதரம் போற்றுவோம்' என்னும் நாடகம் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்வில் நாடகக் கலைஞர் திரு கி. பார்த்திபராஜா நடிக்க உள்ளார். இந்தத் தகவலைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் விதம் அறிவிப்பு தயாரியுங்கள்.

10. தூய தமிழில் எழுதுங்கள்.

"அப்படின்னா பத்திரமா என் கையைப் பிடிச்சுக்கோங்க. அலை இழுத்திரும்...." என்னிடம் பயமுறுத்தினாள்.

சித்தப்பா.... கண்ணை நல்லா மூடிக்கோங்க... இப்ப என் கையைப் பிடித்துக் கொண்டு நடங்க...."

© State Assesment Cell SCERT, Kerala

**IV. 11 முதல் 13 வரையுள்ள வினாக்களுக்கு நான்கு மதிப்பெண்கள் வீதம். (3 x 4 = 12)**

11. உங்கள் பகுதியில் உள்ள நீர் நிலைகள் மாசடைந்து கிடப்பதைச் சரி செய்யும் பொருட்டு ஊராட்சி மன்றத் தலைவருக்குக் கடிதம் எழுதுங்கள்.

12. இரசனைக் குறிப்பு எழுதுங்கள்.

நீலநிறச் சேலை கட்டி
நெளிந்தெழுந்த நடை போட்டுக்
கோலவெழிற் மணற்பரப்பைக்

கொஞ்சவரும் கடல் அலையே!
பவளமணி வெண்முத்து
பாய்ந்தோடும் மீன் கூட்டம்
தவழுபல உயிரினங்கள்
தாங்கிவரும் கடல் அலையே! – கவிமாமணி பி.குமரேசன்

13. (i) போரைத் தடுத்த புலவர் கோவூர்க்கிழாரின் பண்புநலன்களை வரிசைப்படுத்துங்கள்.

(அல்லது)

(ii) உங்கள் பள்ளி இலக்கியமன்றத்தில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்கான சொற்பொழிவு தயாரியுங்கள்.

**V. பின்வரும் வினாவிற்கு ஐந்து மதிப்பெண்கள் மட்டும். (1 x 5 = 5)**

14 (i) சமகாலச் சூழலில் பல்வேறு நிலைகளில் நீர் நிலைகள் அழிக்கப்பட்டு வருகின்ற அவற்றைப் பாதுகாக்கும் பொருட்டு பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வுகளைச் சுட்டிக்காட்டிப் பத்திரிக்கைக்குத் தலையங்கம் தயாரியுங்கள்.

(அல்லது)

(ii) பள்ளி ஆண்டு மலரில் வெளியிட "நீர்வளமை நாட்டுவளம்" என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

(குறிப்பு : நீர்நிலைகள், உயிர்களின் ஜீவநாடி, வேளாண்மைக்கு நீர்நிலைகள் தேவை, நீர்நிலைகளின் இன்றைய நிலை, நீர்நிலை மேலாண்மை)

© State Assesment Cell SCERT Kerala